# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 12 (2018) | பரதநாட்டியம் | நேரம் :- மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

❖ **01 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடியிடுக.**

01. சங்கீர்ண ஜாதி என்ற விருதுப் பெயரை உடையவர்.
1. 1ம் மகேந்திரவர்மன் 2. ராஜசிங்கன் 3. ராஜராஜன்
4. நந்திவர்மன் 5. பல்லவமன்னன்

02. ஊர்மக்கள் வந்து காண்பதற்கான அரங்கு.
1. ஆடம்பலம் 2. சிற்றம்பலம் 3. பேரம்பலம்
4. ரத்னசபை 5. சிற்சபை

03. பாலைநில மக்களால் ஆடப்படும் கூத்து.
1. குன்றக்குரவை 2. சாக்கையர்கூத்து 3. ஆச்சியர் குரவை
4. நாட்டுக்கூத்து 5. வேட்டுவவரி

04. சங்க காலத்தின் அடிப்படைப்பண்
1. நைவளம் 2. காமரம் 3. ஆம்பல் 4. மருதம் 5. காந்தாரம்

05. சிருங்கார விஷயத்திலும் காமசாஸ்திரத்திலும் கைதேர்ந்தவர்.
1. விடன் 2. சேடன் 3. பீடமர்த்தன் 4. விதூஷகன் 5. சடன்

06. ஹாஸ்ய ரஸத்தின் கடவுள்
1. விஸ்ணு 2. எமன் 3. ருத்ரன் 4. இந்திரன் 5. மன்மதன்

07. ரஸத்தோடு நேரடியான தொடர்புடையது.
1. உத்தீபன விபாவம் 2. ஆலம்பன விபாவம் 3. பாவம்
4. அனுபாவம் 5. வியாபிசாரி பாவம்

08. முதன்மைக் கலை அல்லாதது
1. இசை 2. சிற்பம் 3. நடனம் 4. ஓவியம் 5. ஒப்பனை

09. வேஷங்கள் போட்டு ஆடபப்படும் சாஸ்திரீய நடனம்
1. கதகளி 2. கதக் 3. மணிப்புரி 4. ஒடிசி 5. கூச்சுப்புடி

10. சமயத்திற்கு தகுந்தபடி உருமாறிக் கொள்பவள்.
1. சில்பினி 2. சேடி 3. இலிங்கிளி 4. தாத்ரேயி 5. தாஸி

The National e-learning Portal for The General Education

11. அஷுரு என்பது

1. நிறமாற்றம் 2. மயக்கம் 3. நடுங்குதல் 4. வியர்த்தல் 5. கண்ணீர் சொரிதல்

12. சங்க காலத்தில் கூறப்படும் உண்ணாட்டு என்பது.

1. கள்ளினை உண்டு ஆடுதல்
2. வெறிகொண்டு ஆடுதல்
3. கோபம் கொண்டு ஆடுதல்
4. வாழ்த்திக் கொண்டு ஆடுதல்
5. வீரம் கொண்டு ஆடுதல்

13. ரௌத்ர ரஸத்திற்குரிய நிறம்

1. பச்சை 2. வெள்ளை 3. சிவப்பு 4. சாம்பல் 5. நீலம்

14. உயிருள்ள உயிரினங்களைப் பயன்படுத்தும் ஆஹார்ய அபிநயத்தின் பிரிவு

1. நர்மம் 2. புஷ்டம் 3. அலங்காரம் 4. அங்கரச்சம் 5. சஞ்சீலம்

15. jjjjjjj, ததிங்கிணதொம் ததிங்கிணதொம் ததிங்கிணதொம் அமைந்த ஜாதி

1. சதுஸ்ரம் 2. மிஸ்ரம் 3. சங்கீர்ணம் 4. கண்டம் 5. திஸ்ரம்

16. கணபதி கௌத்துவத்தின் இராகம்

1. நாட்டை 2. வசந்தா 3. கல்யாணி 4. அடானா 5. ஆரபி

17. தாய்க்கும் சேய்க்கும் இடையிலான பாவம்.

1. வாத்சல்ய பாவம் 2. சாக்கியர் பாவம் 3. மதுரபாவம்
4. தாசிய பாவம் 5. காந்த பாவம்

18. திரைநோக்கு இடம் பெறும் சாஸ்திரீய நடனம்.

1. கதக் 2. கதகளி 3. ஒடிசி 4. மணிப்புரி 5. பரதம்

19. தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளுக்கு நடனம் அமைத்தவர்

1. வழுவூர் ராமையாப்பிள்ளை 2. மீனாட்சி சுந்தரம் பிள்ளை 3. பாலசரஸ்வதி
4. ருக்மணிதேவி 5. தஞ்சை நால்வர்

20. காயகப்ரியா இடம்பெறும் சக்கரம்

1. அக்னி 2. வேத 3. பாண 4. வஸி 5. திஷி

(20x1=20 புள்ளிகள்)

## பகுதி – II

❖ **பகுதி II இல் இரண்டாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

02. i. நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றையும் நாயகன் நாயகி ஆகியோரையும் குறிப்பிடுக. (4 புள்ளி)

ii. வர்ணத்தின் அனுபல்லவியில் விரும்பிய தீர்மானம் ஒன்றினையும் தாள அங்கக்குறியீட்டில் எழுதுக. (10 புள்ளி)

iii. பதவர்ணத்தின் லட்ஷணத்தை எழுதுக. (6 புள்ளி)

(20 புள்ளிகள்)

03. பிராணி மித்ரா என அழைக்கப்படும் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினையும் கலைத் தொண்டினையும் தருக. (20 புள்ளி)

04. சிறுகுறிப்பு எழுதுக.

i. நால்வகை விருத்திகள்

ii. அபிநயம் (10x2=20 புள்ளி)

05. அஷ்டவித நாயகிகளைக் குறிப்பிட்டு அவர்களுடைய லக்ஷணங்களையும் குணவியல்புகளையும் விபரிக்குக. (20 புள்ளி)

06. பல்லவர் கால கலைவளர்ச்சியினை குறிப்பிடுக. (20 புள்ளி)

07. இலங்கையின் சாஸ்திரிய நடனங்களில் கண்டிய நடனத்தில் இடம் பெறும் 18 வகையான வண்ணங்களையும் குறிப்பிட்டு விளக்குக.

(20 புள்ளி)

The National e-learning Portal for the General Education